Journal of Valartamil, eISSN 2716-5507,
Volume 1, No.2, 2020, (111-121).

# அறிவார்ந்த கவிதைக் கட்டமைப்பு அணுகுமுறையில் திருக்குறள்

# Cognitive Poetic Structure in Thirukkural

Selvajothi Ramalingam
Senior Lecturer
Department of Malaysian Languages and Applied Linguistics
Faculty of Languages and Linguistics
Universiti Malaya
selvajothi@um.edu.my

Received: 03 December 2020; Accepted: 19 December 2020; Published: 21 December 2020

**To cite this article (APA):** Ramalingam, S. (2020). *அறிவார்ந்த கவிதைக் கட்டமைப்பு அணுகுமுறையில் திருக்குறள். Journal of Valartamil*, *1*(2), 111-121. https://doi.org/10.37134/jvt.vol1.2.10.2020

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol1.2.10.2020

***ஆய்வுச் சாரம்:*** *மொழி மனிதனின் தொடர்பு கருவியாக மட்டுமல்லாது அறிவுத் துறை வளர்ச்சிக்கும் முக்கியப் பங்காற்றுகிறது. மொழியின் வாயிலாகப் படைக்கப்படும் இலக்கியங்கள் வாசகர்களிடையே முருகியல் உணர்வை வெளிப்படுத்தினாலும் அதனைத் தாண்டி அறிவார்ந்த நிலையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஆனால் வாசகர்கள் பொதுவாக இலக்கியங்களில் காணப்படும் உணர்வு சார்ந்த முருகியல் கூறுகளுக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். மாறாக, அறிவு நிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் கூறுகளில் கவனம் செலுத்துவதில் சற்றுத் தொய்வு ஏற்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இந்த ஆய்வு தமிழ் நீதி இலக்கியங்களில் ஒன்றான திருக்குறளில் காணப்படும் குறட்பாக்களில் அறிவார்ந்த கவிதைக் கட்டமைப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பதை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ஆய்வின் தரவுகள்* Tsur Rven (2002) *பரிந்துரைத்த அறிவார்ந்த கவிதைக் கட்டமைப்புக் கோட்பாட்டைப் பயன்படுத்திப் பகுப்பாய்வு செய்யப்பட்டன. தரவுசார் அணுகுமுறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக ஆவணப் பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்பட்டது. ஆய்வுப் படிநிலைகளில் முதலாவதாகத் திருக்குறளில் காணப்படும் அறிவார்ந்த கட்டமைப்புக் கொண்ட குறட்பாக்கள் அடையாளம் காணப்பட்டு, பிறகு பகுப்பாய்ப்புச் செய்யப்பட்டது. ஆய்வின் முடிவாக, திருக்குறள் குறட்பாக்களில் ஆக்கச் சிந்தனையும் ஆய்வுச் சிந்தனையையும் சிறந்த முறையில் வெளிக்கொணரப்பட்டுள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.*

***கருச்சொற்கள்:*** *திருக்குறள், அறிவார்ந்த கவிதைக் கட்டமைப்பு, ஆக்கச் சிந்தனை, ஆய்வுச் சிந்தனை*

**Abstract:** Language is not only a communication tool for humans, but it also plays an important role to improve humans' thinking skills. Literature components in languages help humans to cultivate emotional and intellectual intelligence. Most readers are inclined towards emotional intelligence (aesthetic values) rather than the intellectual elements exposed in the literature. Thus, this study presents the intellectual poetic structure in Thirukkural. The data were analyzed qualitatively based on document analysis. The analysis was carried out based on the poetic cognitive theory which was proposed by Tsur Rven (2002). First, the researcher has identified the elements of poetic cognitive in Thirukkural then those elements were analysed. Findings show that Thirukkural is one of the Tamil literature which stimulates thinking skills namely creative and critical thinking skills. These thinking skills were revealed by the figurative language used in the Thirukkural.

**Keyword:** Thirukkural, Intellectual poetic structure, Creative thinking, Critical thinking

## முன்னுரை

மனித இனத்திடையே தொடர்பு கருவியாக விளங்கிய மொழி; நாகரீக வளர்ச்சிக்கு அடையாளமாக இருந்த மொழி இன்று பல நிலைகளில் பரிணாமங்களைக் கடந்து பல துறைகளாக உருவெடுத்துள்ளது. இன்று மொழியானது மனிதனைத் தொடர்புபடுத்துவதற்கு மட்டும் அல்லாது அறிவுத் துறை வளர்ச்சிக்கும் சிந்தனைத் திறன் வளர்ச்சிக்கும் மிகவும் இன்றியமையாததாக விளங்குகின்றது (Fahruroji, 2019). அவ்வாறே மொழி தொடர்பான ஆய்வுகளும் காலத்திற்குக் காலம் மாற்றமும் வளர்ச்சியும் கண்டு வருன்றன. தற்கால மொழி அறிஞர்கள் மொழியை உயிரியல் பின்புலத்தில் (Biolinguistic approach) ஆராய்ச்சி செய்கின்றனர். இந்த அடிப்படையில் மொழி ஓர் அறிவுப்புலன் (intellectual organ) (Chomsky, 1986) என்று ஆய்ந்துரைக்கப்படுகிறது. மனித உடம்பில் ஐம்புலன்கள் இன்றியமையாத கருவிகளாக இருப்பதுபோல் மொழியும் முக்கியப் புலனாகக் கருதப்படுகிறது. அவ்வாறு முக்கியத்துவம் நிறைந்த இந்த மொழியின் துணைகொண்டு படைக்கப்படுகின்ற இலக்கியங்கள் மனிதக் குலத்திற்கு நல்ல வழிகாட்டியாகத் திகழ்வது மட்டுமல்லாது படிக்குந்தொறும் மனித இனத்தின் சிந்தனை வளர்ச்சிக்கும் மீட்சிக்கும் உறுதுணையாக இருக்கின்றது என்பது வெள்ளிடைமலை.

## முந்தைய ஆய்வுகள்

அறிவார்ந்த கவிதைக் கட்டமைப்பு அணுகுமுறையில், பல ஆய்வுகள் இந்தத் துறையில் இடம்பெற்றுள்ளன. அறிவார்ந்த கவிதைக் கட்டமைப்புக் கோட்பாட்டை அறிமுகப்படுத்தியவர் Tsur Rven (2002). கவிதை தொடர்பான ஆய்வுகள் பல அடிப்படைகளில் இருந்தாலும் மனிதனின் சிந்தனைத் திறனோடு தொடர்புடைய ஆய்வுகள்தான் அறிவார்ந்த கவிதைகள் (cognitive poetics). ஒருவர் கவிதையை வாசிக்கும்போது இரண்டு நிலைகளில் தாக்கம் ஏற்படுகின்றன. ஒன்று அவருடைய மனநிலை (emotional) மற்றொன்று அறிவுநிலை (intellectual) (Salleh, 2005). மனநிலை என்பது அவரது உணர்வு தொடர்பானது. வாசகர் ஒரு கவிதையை வாசித்தவுடனேயே மகிழ்ச்சி அடைகிறார்; வேதனைப்படுகிறார்; ஆத்திரம் அடைகிறார். இதுபோன்ற உணர்வுகளைத் தட்டி எழுப்பும் வல்லமை பொதுவாகக் கவிதைகளுக்கு உள்ளன. இஃது ஒருவகையில் முருகியல் (aesthetic) சார்ந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றது (Cuthbert, 2019). மாறாக, இன்றைய காலக்கட்டத்தில் மனவுணர்வுகளுக்கு அப்பால் அறிவுநிலையிலும் மனிதனுக்குத் தாக்கம் ஏற்படவேண்டும். அந்த வகையில் அறிவாற்றலை ஊக்கப்படுத்தும் திறன் கவிதைகளுக்கு உள்ளது. ஒரு கவிதையை வாசிக்கும் போது ஒரு வாசகன் நான்கு கோணங்களிலிருந்து அதனை அணுக முடியும் என்கிறார் Line Brandt (2005).

அ. கவிதையை வாசித்தல்

ஆ. பொருள் அறிதல்

இ. மதிப்பிடுதல்/ஆராய்தல்

ஈ. ஒப்பிடுதல்

அறிவார்ந்த படைப்புகளை உருவாக்குவதற்கு மொழி முக்கிய ஊடகமாகப் பயன்படுகிறது. ஒரு படைப்பாளியின் ஆழ்ந்த அனுபவமே ஒரு சிறந்த இலக்கியப் படைப்புக்கு வித்திடுகிறது. இவ்வாறான

இலக்கியப் படைப்புகளே மொழியியல் தரவுகளாகத் திகழ்கிறது (Fauconnier, 1997). இவ்வாறான படைப்புகளில் பொதிந்திருக்கின்ற எழுத்து, சொல், தொடர், கருத்து, அமைப்பு ஆகிய அனைத்தும் குறிப்பிட்ட சில காரணங்களுக்காகவே உருவாக்கப்பட்டிருக்கும். இவ்வாறு படைக்கப்படும் ஓர் இலக்கியப் படைப்பு ஒரே வகையான பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறவியலாது. ஒவ்வொரு வாசகருக்கும் அவருடைய பட்டறிவிற்கேற்ப வெவ்வேறான புரிதலைக் கொடுக்கிறது. இதுவே அவர்களின் சிந்தனைத் திறனுக்கு வித்திடுகின்றது.

அடுத்ததாக, கவிதைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழியணிகளுக்கும் சிந்தனைத் திறனுக்கும் உள்ள தொடர்பு அறிவார்ந்த கவிதைக் கட்டமைப்புக் கோட்பாட்டில் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. கவிதைகளில் பயன்படுத்தப்பட்டிருக்கும் மொழியணிகள் பயன்பாடு சிந்தனைத் திறன் வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றுகின்றன. இந்தச் சிந்தனைத் திறன் மனித வாழ்வில் ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண உந்துதலாக அமைகின்றது (Montag-Smit & Maertz, 2017). திருக்குறளில் அதாவது 1330 குறட்பாக்களில் பெரும்பாலான குறள்களில் சிந்தனைத் திறன் கூறுகள் புதைந்திருப்பதைக் காணமுடிகின்றது (Selvajothi, 2009). இந்தச் சிந்தனைத் திறன் பலவகை இருந்தாலும் இந்த ஆய்விற்கு ஆய்வாளர் இரண்டனை மட்டும் எடுத்துக் கொண்டுள்ளார். அவை ஆக்கச் சிந்தனையும் ஆய்வுச் சிந்தனையும் ஆகும்.

**ஆய்வுச் சிக்கல்**

பொதுவாக, இலக்கியங்கள் பல்வேறு நோக்கங்களுக்காகப் படைக்கப்படுகின்றன. படைப்பாளரின் படைப்பை வாசகர்கள் வாசிக்கும்போது படைப்பாளருக்கும் வாசகர்களுக்கும் ஒரு தொடர்பு ஏற்படுகின்றது (Safei & Hassan, 2020). இந்நிலையில் வாசகர்கள் படைப்பாளர்களின் நோக்கத்தை முழுமையாக விளங்கிக் கொள்வது ஒரு சவாலாகவே இருக்கின்றது (Venugopalan, 2019). இதன் அடிப்படையில் திருக்குறளில் பொதுவாக அழகியல் (aesthetic); கருத்தியல் (factual) சார்ந்த ஆய்வுகளே அதிகம் இடம்பெறுகின்றன. இதற்கு அப்பால் அறிவுநிலை சார்ந்த ஆய்வுகள் மிகவும் அரிதாகவே அமைந்துள்ளன.

**ஆய்வு நோக்கம்**

திருக்குறளில் காணப்படும் குறட்பாக்களில் அறிவார்ந்த கட்டமைப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பதை ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கமாக அமைகிறது.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்வாய்வு தரவுசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு அணுகுமுறையைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணம் இலக்கியப் படைப்புகளை ஆராய்வதற்கு ஆவணப் பகுப்பாய்வு முறை பொருத்தமாக அமைகின்றது என்று வலியுறுத்துகின்றார் Patton (2005). இதன் அடிப்படையில் ஆவணம் அல்லது உரைநடை பகுப்பாய்வு தரவுசார் அணுகுமுறைகளில் ஒன்றாகவே கருதப்படுகின்றது. இவ்வாய்வில் முதல் படிநிலையாக, திருக்குறளில் காணப்படும் அறிவார்ந்த கட்டமைப்பு கொண்ட குறட்பாக்கள் அடையாளம் காணப்பட்டது. பிறகு அடையாளம் காணப்பட்ட குறட்பாக்களில் எவ்வாறு இந்தக்

*கட்டமைப்பு அமைந்துள்ளது என்பதை* Tsur Rven (2002) *பரிந்துரைத்த அறிவார்ந்த கவிதைக் கட்டமைப்புக் கோட்பாட்டைப் பயன்படுத்திப் பகுப்பாய்வு செய்யப்பட்டது.*

### *பகுப்பாய்வு*

*இவ்வாய்வில் இருந்து வெளிக்கொணரப்பட்ட தரவுகள் ஆவணப் பகுப்பாய்வுமுறையில் பகுத்தாராயப்பட்டன. மேலும் ஆய்வின் எல்லையாக ஆக்கச் சிந்தனையும் ஆய்வுச் சிந்தனையும் மட்டும் அமைந்திருப்பதனால் இந்த இரண்டு வகை சிந்தனைத் திறன்கள் அடிப்படையில் ஆய்வாளர் பொருத்தமான மொழியணிகள் கொண்டு பகுப்பாய்வு செய்திருக்கின்றார்.*

### *ஆக்கச் சிந்தனை*

*ஆக்கச் சிந்தனை என்பது ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கின்ற தனித்துவம் வாய்ந்த சிந்தனைத் திறனாகும். ஒரு படைப்பை வெளிப்படுத்துவதற்கும் ஒன்றைக் காட்சிப்படுத்துவதற்கும் இவ்வாறான ஆக்கச் சிந்தனை முக்கியமாக அமைகிறது. இதற்கு அவர்கள் ஒரு பொருளை இன்னொன்றோடு ஒப்பிட்டு; தொடர்புபடுத்திப் பார்க்கும் திறன் மிகவும் இன்றியமையாததாக ஆகிறது. அவ்வகையில் குறட்பாவில் அமைந்துள்ள உவமை, உருவகம், காட்சிப்படுத்தும் அணிகள் வழி வெளிப்படும் ஆக்கச் சிந்தனைக் கூறுகள் தொடர்ந்துவரும் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.*

### *உவமை - ஒப்பு நோக்குதல்/ ஒத்த தன்மை*

*திருக்குறளில் உவமையும் உருவகமும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒரு கருத்தையோ பொருளையோ எளிமையாக விளக்கிப் புரிய வைப்பதற்கு அந்தக் கருத்தோ பொருளோ தொடர்பான பொருளன்றி வேறொரு பொருளைக் கொண்டு விளக்கும்பொழுது படிப்போர் அல்லது கேட்போர் எளிதில் புரிந்துகொள்ள இயலும். அதாவது பயன்படுத்தப்படும் உவமை அல்லது உருவகம் கூறவரும் கருத்தை வெளிப்படுத்தும் இயல்பைக் கொண்டிருக்கும். இதனை மூன்று படிநிலைகளில் காணலாம்:*

*முதலாவது : இரண்டு பொருளையும் ஒப்பு நோக்குதல்.*

*இரண்டாவது: இரண்டு பொருள்களிலும் உள்ள ஒத்த தன்மையை அடையாளம் காணுதல்.*

*மூன்றாவது : இரண்டு பொருளையும் தொடர்புபடுத்துதல்.*

*மேற்காணும் அடிப்படைகளில் எவ்வாறு ஒப்புமையை அடையாளம் காணப்பட்ட் சிந்தனைத் திறனை வளப்படுத்துகின்றது என்பது புலப்படுகின்றது.*

*காட்டு 1:　　கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லாதவர்　(குறள்:393)*

**அட்டவணை 1. குறட்பாவில் பயன்படுத்தப்பட்ட உவமையும் பொருளோடு உள்ள தொடர்பும்**

| பொருள் | உவமை | ஒத்ததன்மை | தொடர்புபடுத்துதல் |
|---|---|---|---|
| கற்றவர்கள் | கண்ணுடையவர்கள் | பயன் உண்டு | சிக்கல்களை எதிர்கொள்ளும் ஆற்றல் உண்டு |
| கல்லாதவர்கள் | முகத்தில் புண்ணுடையவர்கள் | பயன் இல்லை | எந்தவொரு பயனும் இல்லை; தொடர் சிக்கல் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது |

மேற்காணும் குறட்பா, கல்லாதவர்கள் குருடர்களுக்குச் சமமாகக் கருதப்படுகிறார்கள் என்ற கருத்தினை வலியுறுத்துகின்றது. இந்தக் கருத்தை மேலும் தெளிவுபடுத்துவதற்கு 'கண்'; 'புண்' என்ற இரண்டு உவமைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. 'கண்' என்பது கற்றவர்களுக்கும் 'புண்' என்பது கல்லாதவர்களுக்கும் உவமையாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

*காட்டு 2:　　அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட*
*மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்　　(1076)*

**அட்டவணை 2. குறட்பாவில் பயன்படுத்தப்பட்ட உவமையும் பொருளோடு உள்ள தொடர்பும்**

| பொருள் | உவமை | ஒத்ததன்மை | தொடர்புபடுத்துதல் |
|---|---|---|---|
| கயவர் | பறை | இசையை அல்லது ஓசையை எழுப்பும் | பறை எப்படி எந்தவொரு விளைவையும் பொருட்படுத்தாது இசையை அல்லது ஓசையை எழுப்புகிறதோ அதுபோன்று கயவர்கள் எந்தவொரு விளைவையும் எண்ணிப்பார்க்காமல் தாம் கேட்டறிந்த மறைபொருள்களை வலியப் போய்ச் சொல்லுவர். |

இந்தக் குறட்பா, எந்தவொரு விளைவையும் எண்ணிப்பார்க்காமல் தாம் கேட்டறிந்த தகவலைப் (மெய்/பொய்) பிறரிடம் வலிய கொண்டுபோய் சேர்க்கும் பழக்கம் கொண்டவர்கள் பற்றிக் கூறவருகிறது. இந்தக் கருத்தை மேலும் தெளிவுபடுத்துவதற்கு இவ்வாறான பழக்கமுடைய மனிதர்கள் (கயவரை) பறைக்கு உவமையாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளனர்.

*காட்டு 3:　மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ*
*டியைந்துகண் ணோடா தவர்　　(576)*

**அட்டவணை 3. குறட்பாவில் பயன்படுத்தப்பட்ட உவமையும் பொருளோடு உள்ள தொடர்பும்**

| பொருள் | உவமை | ஒத்ததன்மை | தொடர்புபடுத்துதல் |
|---|---|---|---|
| மனிதன் | மரம் | இரண்டும் அன்பு என்ற உணர்வுக்குத் தூண்டப்படாதவை | மரத்திற்கு எந்தவொரு உணர்ச்சியும் இல்லை, அதுபோன்று மனிதனிடத்தில் அன்பு இல்லையெனில் அவன் உணர்ச்சியற்ற மரத்தைப் போன்றவனாகக் கருதப்படுகிறான். |

*மேற்காணும் குறட்பா, அன்பு குணம் இல்லாத மனிதரைப் பற்றி விளக்கப்பட்டிருக்கிறது. அன்பு இல்லாத மனிதர்களின் இயல்பை விளக்குவதற்கு மரம் உவமையாகக் காட்டப்பட்டுள்ளது. அதாவது, மரத்திற்கு உணர்ச்சி இல்லாததுபோல் அன்பு இல்லையெனில் மனிதனும் உணர்ச்சியற்ற மரமாகக் கருதப்படுகின்றான்.*

*காட்டு 4: பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை*
*நிச்ச நிரப்புக் கொன்றாங்கு (532)*

**அட்டவணை 4. குறட்பாவில் பயன்படுத்தப்பட்ட உவமையும் பொருளோடு உள்ள தொடர்பும்**

| பொருள் | உவமை | ஒத்ததன்மை | தொடர்புபடுத்துதல் |
|---|---|---|---|
| மறதி | வறுமை | இரண்டும் அறிவை இழக்கச் செய்யும் | வறுமையால் விளையும் தீமையும் மறதியால் விளையும் தீமையும் ஒரே பாதிப்பைக் கொடுக்கும் |

*இந்தக் குறள், மறதியால் ஏற்படும் விளைவைப் பற்றி கூறுகிறது. மனிதனிடத்தில் உள்ள மறதி எளிதில் அறியக் கூடியது அல்ல. இந்தக் கருத்தை வெளிப்படுத்துவதற்கு வறுமை உவமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது நாள்தோறும் விடாமல் வரும் வறுமை அறிவைக் மழுங்கச் செய்வதுபோல ஒருவனுடைய புகழை அவனுடைய மறதி கொன்றுவிடும்.*

*ஆக, மேற்காணும் நான்கு எடுத்துக் காட்டுகள் வழி குறட்பாக்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் உவமைகள், சிந்தனைத் திறனோடு மிகவும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளன. இதன்வழி வாசகர்களின் சிந்தனைத் திறன் எவ்வாறு மேலோங்க வழிசெய்ய இயலும் என்றால் முதல் படிநிலையில் உவமைக்கும் உவமைப்படுத்தப்படுகின்ற பொருளுக்கும் உள்ள ஒத்த தன்மையைக் அடையாளம் காண வேண்டும். அடுத்த படிநிலையில் இரண்டனையும் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும். குறட்பாக்களில் அணிகள் பயன்பாடு வாசிப்போரின்; கேட்போரின் ஆக்கச் சிந்தனையைத் தூண்டவல்லது. மேற்காணும் உவமை அணிகளின் பயன்பாடானது வாசிப்போர் அதனைப் படிக்கும் போது அதிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறிந்துகொள்ள முற்படுகின்றனர். இவ்வாறு ஒற்றுமை வேற்றுமைகளை அறியும்*

பொருட்டுப் பகுப்பாய்வு *(analysis)* செய்கின்றனர். இவ்வாறான பகுப்பாய்வானது சிந்தனைத் திறன் வகைகளில் மேல்நிலை சிந்தனைத் திறனாகக் கருதப்படுகிறது. இப்படித் தொடர்புபடுத்தி பார்ப்பது ஆக்கச் சிந்தனையின் கூறுகளில் ஒன்றக்ச் சித்தரிக்கப்படுகின்றது (Kao, 2020). மேலும் அவர் கூறுவதாவது இதுபோன்ற பயிற்சிகள் (தொடர்புபடுத்திப் பார்த்தல்) சிந்தனைத் திறன் வளர்ச்சிக்கு மேலும் வலுசேர்க்கின்றது.

## உருவகம்/ *metaphor* -– ஒத்ததன்மை/ *analogy*

உருவகம் என்பது உவமானத்தையும் உவமேயத்தையும் வேற்றுமைப்படுத்தாமல் ஒற்றுமைப்படுத்திக் கூறும் முறை. உவமை என்பது ஒரு பொருளை இன்னொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுதல் ஆகும். ஆனால், உருவகம் ஒரு பொருள் இன்னொரு பொருளாகவே ஆகி நிற்கும். இந்த உருவகப் பயன்பாடும் ஆக்கச் சிந்தனை வளர்ச்சிக்குத் துணைபுரிகின்றது. இதனைக் கீழ்க்காணும் குறளின் வாயிலாக அறிய முடியும்.

*காட்டு: காலை அருப்பிப் பகலெல்லாம் போதாகி*
*மாலை மலரும் நோய்*

இந்தக் குறட்பா காதல் உணர்வு கொண்ட ஒரு பெண்ணைப் பற்றிக் கூறுகிறது. அதாவது ஒரு மலரானது காலையில் மொட்டாக இருந்து, பகலில் அரும்பாகி மாலையில் மலர்ந்து நிற்கின்றது. இஃது ஒரு மலரின் வளர்ச்சி நிலையைக் காட்டுகிறது. இருப்பினும், வள்ளுவர் இந்தச் சூழலைக் காதல் உணர்வுகொண்ட ஒரு பெண்ணோடு ஒப்பிடுகிறார். இந்தக் குறளில் எந்த இடத்திலும் ஒரு பெண்ணைப் பற்றியோ காதலைப் பற்றியோ வள்ளுவர் குறிப்பிடவில்லை. ஆனால், ஒரு பெண்ணின் காதல் உணர்வுகளை ஒரு மலராகவே ஒப்பிடும் போது படிப்போர் நிச்சயமாக அதனைத் தொடர்புபடுத்தி அதன் உட்கருத்தை அறிந்துகொள்ள வேண்டும். இவ்வாறான சூழலில் சிந்தனைத் திறன் மேலோங்கும். ஓர் அணியின் புதைநிலை கருத்தை அல்லது மறைபொருளை அறிந்து கொள்ளும் பயிற்சியும் முயற்சியும் சிந்தனைத் திறன் வகைகளில் ஒன்றாகவே பார்க்கப் படுகிறது.

## காட்சிப்படுத்துதல் - கற்பனைத்திறன்

சிந்தனைத் திறனில் அடுத்ததொரு பரிணாமம் காட்சிப்படுத்துதல் ஆகும். அதாவது ஒரு சூழலையோ கருத்தையோ விளங்கிக் கொள்வதற்கு ஒரு காட்சியாகப் பார்ப்பது. நடைமுறை வாழ்க்கையில் எந்த நிலையில் உள்ள மக்களும் படித்துக் கூறவருகின்ற கருத்தை விளங்கிக் கொள்ளவேண்டும். இந்தச் செய்தியின் அடிப்படையில் குறட்பாக்களை ஆய்வுக்கு எடுத்துப் பார்க்கும்போது மிக நுட்பமான முறையில் இவை கையாளப்பட்டுள்ளது தெரிய வருகிறது. இதனைக் கீழ்க்காணும் குறள்வழி அறிய முடியும்.

*காட்டு: குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே*
*உடம்பொடு உயிரிடை நட்பு (குறள்: 338)*

இந்தக் குறட்பாவின் பொருள் நிலையாமை ஆகும். அதாவது உடம்போடு உயிர்க்கு உள்ள உறவு, தான் இருந்த கூடு தனியே இருக்க அதைவிட்டு வேறிடத்திற்குப் பறவை பறந்தாற் போன்றது என்பதை வலியுறுத்துகின்றது. இங்கு வள்ளுவர் ஒரு சூழலை உவமையாகக் காட்டுகின்றார். உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பை வள்ளுவர் இங்குக் காட்சிப்படுத்துகிறார். அதாவது, கூட்டைவிட்டுப் பறவை பறந்து செல்வதைக் காட்சிப்படுத்தியிருக்கின்றார். இந்தக் குறட்பா வரிகளைப் படித்தவுடனேயே ஒவ்வொரு வாசகரும் அவரவர் அனுபவத்திற்கேற்ப காட்சிப்படுத்திப் பார்ப்பர். இந்தச் செயலானது சிந்தனைத் திறன் வளர்ச்சிக்குக் குறிப்பாக ஆக்கச் சிந்தனை வளர்ச்சிக்கு வலுசேர்க்கிறது. ஆக்கச் சிந்தனை என்பது ஒரு மனிதன் இதுவரை எவ்வாறு சிந்தித்து ஒரு சிக்கலைத் தீர்வு காண்கிறான் எனவும் இனி எவ்வாறெல்லாம் சிந்தித்துத் சிக்கல்களைத் தீர்வு காண்பான் எனவும் கண்டறிந்து கூறுவதும் அடங்கும். நம்முடைய அன்றாட வாழ்வில் பல சிக்கல்கள் இடம்பெறுகின்றன. இந்தச் சிக்கல்கள் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு ஒரு காரணம் மனிதனிடம் குறைந்து காணப்படும் ஆக்கச் சிந்தனையே ஆகும்.

## ஆய்வுச் சிந்தனை

ஆய்வுச் சிந்தனை என்பது ஒன்றைத் தெளிவாகவும் ஏரணமாகவும் சிந்திக்கும் ஆற்றல் ஆகும். ஒன்றை மதிப்பிட்டு, சீராய்ந்து, தீர்மானம் செய்வதற்கு இந்த வகை சிந்தனைத் திறன் மிகவும் இன்றியமையாததாக அமைகிறது. அவ்வகையில் குறட்பாவில் ஆய்வுச் சிந்தனைக் கூறுகள் எவ்வாறு இடம்பெற்றுள்ளன என்பதைத் தொடர்ந்து காண்போம்.

## மதிப்பிடுதல்

ஆய்வுச் சிந்தனையின் முக்கியமான திறன்களில் ஒன்று மதிப்பிடுதல். மதிப்பிடுதல் தொடர்பான கருத்துருவாக்கம் குறட்பாக்களில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதனைப் பார்ப்போம்.

*காட்டு: குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்*
*மிகைநாடி மிக்க கொளல் (குறள்: 504)*

ஒருவனுடைய குணங்களை ஆராய்ந்து, பிறகு குற்றங்களையும் ஆராய்ந்து, அவற்றுள் மிகுதியானவை எவையென அறிந்து, மிகுந்திருப்பவற்றால் அவனைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்பது இக்குறட்பாவின் பொருள். இந்தக் குறட்பாவின் கருத்து, ஒருவரின் குணநலன்களை ஆராய்ந்து, அவர் எத்தகையோர் எனத் தீர்மானம் செய்ய வேண்டும்; அவரோடு நட்புறவு கொள்ள வேண்டும் என்பதாகும்.

இந்தக் குறளைப் படிக்கும் வாசகர் முதலில் ஒருவருடைய குணநலன்களை ஆராய முற்படுகின்றார். இங்குப் பகுத்தாராய்ந்தறியும் தன்மை புலப்படுகிறது; மேலும் ஒருவரை மதிப்பிடும் திறனும் வளப்படுத்தப்படுகிறது. அதோடு நில்லாமல் மேலும் தான் ஒரு முடிவுக்கு வருகிறார் (தீர்மானம் செய்கிறார்). ஆக, இவ்வாறான செயல்பாடுகள்தான் ஒருவருடைய சிந்தனையைத் தூண்டுவதாக அமைகிறது. இந்த ஒரே குறட்பாவில் மூன்று வகையான சிந்தனைத் திறன் அடங்கியிருப்பது திருக்குறளுக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வண்ணம் அமைகிறது.

**வினாக்கள்வழி ஆய்வுச் சிந்தனை**

*காட்டு: இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல் (குறள்: 517)*

மேற்காணும் எடுத்துக்காட்டு, வினாக்கள் கொண்ட குறட்பா அல்ல. இருப்பினும் வினாக்களுக்கான விடையாக இந்தக் குறட்பாவை அணுகிப் பார்க்கலாம். அதாவது இந்தத் தொழிலை இந்தக் காரணத்தால் இவன் செய்து முடிக்க வல்லவன் என்பதை ஆராய்ந்தறிந்து அத்தொழிலை அவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்பது இந்தக் குறளின் பொருள். தொடுக்கப்படும் வினாக்கள் வாயிலாகவும் ஒருவருடைய சிந்தனையைத் தூண்ட இயலும் (Supramani, 2006). குறிப்பாக, கேட்கப்படும் வினாக்களின் வகைகளுக்கேற்றவாறு ஒருவருடைய சிந்தனை துலங்குகிறது. அதாவது அடிநிலை சிந்தனைக்கான வினாக்களும் (Low Order Thinking Skills) மேல்நிலை சிந்தனைக்கான வினாக்களும் (High Order Thinking Skills) (Bloom & Krathwohl, 1984) இதில் அடங்கும். மேற்காணும் குறட்பாவில் மூன்று வகையான வினாக்கள் புதைந்து கிடக்கின்றன. அதாவது 'எது', 'ஏன்' 'யார்' ஆகியவையாகும். இதில் எது, யார் எனும் இரண்டு வினாக்கள் அடிநிலை சிந்தனையைச் சார்ந்தது. மேலும் ஏன் என்ற வினா மேல்நிலை சிந்தனையைச் சார்ந்தது. குறிப்பாக, ஏன் என்ற வினா, காரணத்தை ஆராயவும் கண்டறியவும் பயன்படுத்தப்படுகிறது. இஃது உயர்நிலை சிந்தனையில் பகுத்தல் (analysis) வகையைச் சார்ந்ததாக அமைகிறது.

காட்டு:

| | |
|---|---|
| எந்தத் தொழில்? | - இதனை |
| யாரிடம் கொடுப்பது | - இவன் |
| ஏன் கொடுக்க வேண்டும் (எக்காரணத்திற்காக)? | - இதனால் |

இந்த மூன்று வினாக்களும் மேற்காணும் ஒரே குறளில் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான வினாக்கள் புளூம் சிந்தனைக் கோட்பாடோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சிந்தனைத் திறனை வளப்படுத்துவதற்குக் குறட்பாக்கள் மிகவும் துணைபுரிகின்றன என்பது உறுதியாகின்றது. இவற்றிற்கு விடைகள் காணும் போது மனிதனின் அறிவாற்றலும் வளப்படுத்தப்படுகிறது.

**முடிவுரை**

ஆக்கச் சிந்தனையும் ஆய்வுச் சிந்தனையும் சிந்திக்கும் ஆற்றலே தவிர அறிவாற்றல் என்பது கிடையாது. ஆகையால் யாவரிடமும் சிந்திக்கும் திறன் புதைந்து கிடக்கிறது. புதுப் புதுக் கருத்துகள் உருவாகுவதற்கும் புதிய கோணத்தில் சிந்தித்துச் செயல்படுவதற்கும் இந்தச் சிந்தனைத் திறன் இன்றியமையாததாக அமைகிறது. இதனைத் திருக்குறள் போன்ற இலக்கியச் செல்வங்களில் ஆராய்வது; அதன்வழி சிந்தனைத் திறன் வளர்ச்சியைப் பெற முயல்வது தமிழ்மொழி; தமிழ் இலக்கியங்களின் அடுத்தக்கட்ட வளர்ச்சிக்கு மேலும் வலுசேர்க்கும் என்பது திண்ணம்.

## Reference


Bloom, B. S., & Krathwohl, D. R. (1984). *Taxonomy of educational objectives book 1: Cognitive domain*. Boston: Addison Wesley Publishing Company.

Brandt, L., & Brandt, P. A. (2005). Cognitive poetics and imagery. *European Journal of English Studies*, *9*(2), 117-130.

Chomsky, N. (1986). *Knowledge of language: Its nature, origin, and use*. Westport: Greenwood Publishing Group.

Cuthbert, A. S. (2019). Literature as aesthetic knowledge: implications for curriculum and education. *The Curriculum Journal*, *30*(2), 181-195.

Fahruroji, F. (2019). Relationship Between Language and Thinking Activities as Well As Relationship Between Language and Culture. *Prosiding Pertemuan Ilmiah Internasional Bahasa Arab,* 1401-1416.

Fauconnier, G., & Turner, M. (2008). *The way we think: Conceptual blending and the mind's hidden complexities*. New York: Basic Books.

Kao, C. Y. (2020). How Figurativity of Analogy Affects Creativity: The Application of Four-Term Analogies to Teaching for Creativity. *Thinking Skills and Creativity*. Retreived from https://doi.org/10.1016/j.tsc.2020.100653

Brandt, L., & Brandt, P. A. (2005). Making sense of a blend: A cognitive-semiotic approach to metaphor. *Annual Review of Cognitive Linguistics*, *3*(1), 216-249.

Montag-Smit, T., & Maertz Jr, C. P. (2017). Searching outside the box in creative problem solving: The role of creative thinking skills and domain knowledge. *Journal of Business Research*, *81*, 1-10.

Patton, M. Q. (2005). Qualitative research. *Encyclopedia of statistics in behavioral science*. 3, 1633 - 1636.

Safei, M., & Hassan, T. R. R. (2020). Daun sebagai Wahana Komunikasi dalam Kesusasteraan Melayu. *Jurnal Komunikasi: Malaysian Journal of Communication*, *36* (3), 157-175.

Salleh, H. (2005). Puisi Siti Hawa Haji Salleh: Lintasan Tragis yang Menghibakan Arbak Othman. *Dewan sastera*, *35*(7-12).

Selvajothi, R. (2009). *Penggunaan Bahasa Kiasan dalam Karya Thirukkural: Satu Analisis*. (Disertasi Sarjana Bahasa Moden) Fakulti Bahasa dan Linguistik: Universiti Malaya.

Supramani, S. (2006). Penyoalan Guru : Pemangkin Pemikiran Aras Tinggi Murid dalam Jurnal Pendidikan Fakulti Pendidikan Universiti Malaya, Kuala Lumpur: Universiti Malaya.

Tsur, R. (2002). Aspects of cognitive poetics. *Cognitive Stylistics: Language and cognition in text analysis*, 279-318.

Venugopalan, M. (2019). Building Critical Thinking Skills Through Literature. In *International Forum of Teaching and Studies 15* (1), pp. 38-44). New York: American Scholars Press, Inc.